1975 அக்டோபர் 27]

ஆலோசனைக் குழுவில் அதைப்பற்றி முடிவெடுத்து திரைப்பட பிரிவுகளில் இந்த டெலிவிஷன் சம்பந்தமான பட்டப்படிப்பைத் தொடங்க ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, திரைப்படக் கல்லூரியில் போதுமான மாணவர்கள் கலந்துகொள்ளவில்லை, சேரவில்லை என்ற குறைபாடு இருக்கிறதே, அது உண்மையா? அப்படியானால் அதை நிவர்த்திக்க அரசு ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த பட ரேடியோக்கள் சம்பந்தமாகப் பயிற்சி கொடுப்பதற்கு முன்னாலே, பட ரேடியோக்கள் சென்னையிலே அதிகமாக வாங்கப்பட வேண்டுமென்பதற்காக அதன் விலைகளைக் குறைப்பதற்கு அரசு ஏதேனும் சிபார்சு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மத்திய அரசுதான் அதற்குக் கருணை காட்ட வேண்டும்.

அரிசனங்களுக்கு வீடுகள்

*84 வினா—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சி கழகத்தால் அரிசனங்களுக்கு 1974-75 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் எத்தனை கிராமங்களில் வீடு கட்டும் திட்டம் உள்ளது?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) முதல் கட்டத்தில் 23 கிராமங்களும் இரண்டாவது கட்டத்தில் 22 கிராமங்களும் வீடுகள் கட்டுவதற்கு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டு கழகத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(இ) முதல் கட்டத்தில் ரூ. 28 லட்சங்களும் இரண்டாவது கட்டத்தில் ரூ. 24 லட்சங்களும் செலவாகுமென உத்தேசமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

[1975 அக்டோபர் 27

(முற்பகல் 10-00)

திரு. மு. முத்தையா: அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிற எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய அரிசனங்களுடைய ஜனத்தொகை அடிப்படையில் வீடு கட்டிக் கொடுப்பது நிர்ணயம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அந்த எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டுத்தான் தீரும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரிசனங்கள் தொகை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவது, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட மனைகள், எடுக்கப்பட்ட மனைகளில் அரசாங்கத் திட்டத்தின்கீழ், விதிகளின்படி குடியிருப்புக்கு இடம் முறையானபடி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான் வீடுகள் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றன.

* 85 வினா.—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் எண்டத்தூர் அரிசன காலனியில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஆம்.

திரு. வை. பாலசுந்தரம்: தற்போது அச்சிறுபாக்கம் எண்டத்தூரில் கட்டப்பட்டுள்ள வீடுகள் ஏற்கனவே நல இலாகாவில் கட்டப்பட்ட இல்லங்கள் ஆகும். அதிலே 50 சதவிகிதம் அரிசன மக்களுக்குத்தான் வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள 50 சதவிகிதத்தினருக்கு தமிழ்நாடு அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில் எண்டத்தூர் கிராமத்தில் இக் கழகம் வகுத்துள்ள திட்டத்தில் இரண்டாவது கட்டமாக 77 வீடுகள் கட்ட உத்தேசித்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]